விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற பயிர்ச்சேதம் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் முன்னிலையில், மழையால் சேதம் அடைந்த பயிர்களின் விவரம் குறித்து விவசாயிகளிடம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கேட்டறிந்து, பயிர்ச்சேதம் மற்றும் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான விண்ணப்பங்களை விவசாயிகளிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் தெற்கு ஒன்றியம் அம்மா மக்கள் முன்னேற்றக் கழக ஒன்றியச் செயலாளர் அரியராவி. எஸ்.கண்ணன் கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சிவ. தியாகராஜன், செம்பியன் பட்டூர்.அமிர்தலிங்கம் , பா. செங்குட்டுவன், பாவாடை. கோவிந்தசாமி, கனக. கோவிந்தசாமி, தி.வேல்முருகன், பெண்ணாடம் பேரூர் கழக செயலாளர் குமரவேல், மற்றும் மருவத்தூர். ஜெயராமன், கோதண்டபாணி தொளார் இராஜேந்திரன், கூடலூர். ஜெயராமன், கொத்தனூர். ரகுநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

பா.ஜ.க.வினர் அநாகரிகமாக நடந்து கொண்டது கண்டனத்திற்குரியது!

திருச்சியில் முதல்வரின் கோரிக்கைக்கு பிரதமர் பதில் தராதது ஏன்?

தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கேள்வி!

சென்னை, ஜன. 4-

முதல்வர் வைத்த கோரிக்கைகள் குறித்து பேசாத பிரதமர், முதல்வர் பேசும் போது மோடி என கத்திய பா.ஜ.க.வினரின் செயலுக்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டனம் தெரிவி த்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நேற்று முன்தினம் (02.01.2024) திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஒன்றிய பிரதமரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு, அதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசிய பொழுது 'மோடி', 'மோடி' என பாரதிய ஜனதா கட்சியினர் கத்தியது அநாகரிகத்தின் உச்சம். இது வன்மையானக் கண்டனத்திற்குரியதாகும். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தி.மு.க.வினர் உள்ளிட்டோர் அமைதி காத்த விதமும் முதலமைச்சர் அவர்கள் மேடையில் பேசிய விதமும் நாகரிகத்தின் உச்சமாகும்.

முதலமைச்சர் அவர்கள் தனது உரையின் பொழுது தமிழ்நாட்டின் அத்தியாவசிய தேவைக்கான பல் வேறு கோரிக்கைகளை வைத்து, இது அரசியல் முழக்கம் அல்ல, தமிழ்நாட்டின் அடிப்படைத் தேவை, மக்களின் கோரிக்கை என்று குறிப்பிட்டது மிகுந்த பாராட்டுதலுக்குரியதாகும். ஆனால் முதலமைச்சர் வைத்த கோரிக்கைகள் எதையும் பிரதமர் மோடி கவனத்தில் கொள்ளாமல், அதற்கான பதில் கூறாமல், தமிழ் மொழிக்காக நான் பேசி வருகிறேன், ஒன்றிய அமைச்சர்கள் 400க்கும் மேற்பட்ட முறை தமிழ்நாட்டுக்கு வந்துள்ளார்கள், தமிழ்நாட்டுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றெல்லாம் பேசுவது தமிழ்நாட்டு மக்களை அப்பட்டமாக அவமதிக்கும் புறக்கணிக்கும் செயலாகும்.

சென்ற இடமெல்லாம் தமிழைப் பற்றி பேசுவதாக மோடி பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த பண்டைய மன்னர்களை பற்றியும், விஞ்ஞானி சாமிநாதன் போன்றவர்களை பற்றியும் புகழ்ந்து பேசுவதன் மூலம் தமிழ் நாட்டில் பிரதமர் என்ன செய்ய நினைக்கிறார்?. மொழியின் பெருமையைப் பற்றி பேசிவிட்டால் மொழி வளர்ந்து விடுமா? சமஸ்கிருதத்திற்கும், இந்திக்கும் பிரதமர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி, அந்த மொழியின் வளர்ச்சிக்கு எடுத்து வரும் நடவடிக்கை, ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒவ்வொரு சட்டத்திற்கும் வாயில் நுழையாத இந்தி பெயர்களை சூட்டி அதை எல்லோரும் உச்சரிக்கை செய்யும் விதம் இப்படி வடமொழிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் பிரதமர் மோடி; தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஒதுக்கீடு செய்த நிதி எவ்வளவு? எத்தனை நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி இருக்கைகள் ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்டுள்ளது?. அதற்கு எவ்வளவு நிதி வழங்கப்பட்டுள்ளது?. இவற்றையெல்லாம் மக்கள் அறிய மாட்டார்கள் அல்லது கேட்கமாட்டார்கள் என்கிற நினைப்போடு தொடர்ந்து பிரதமர் மோடி அவர்கள் வாயில் வடை சுடுகிற பணியை மட்டுமே செய்து வருகிறார்.

அண்மையில் இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளத்தால் தமிழ்நாட்டின் வடபகுதியும், தென்பகுதியும் நிலை குலைந்தது. தமிழ்நாடு அரசும் முதலமைச்சரும் எடுத்த நடவடிக்கையால் வெள்ளத்தில் இருந்து மக்கள் மீண்டாலும் வாழ்க்கையில் இருந்து இன்னும் மீளவில்லை. அதற்கு பெருமளவு நிதி தேவைப்படுகிறது. எனவே இந்த கோரிக்கையை தமிழ்நாட்டு முதலமைச்சர் பிரதமரிடம் வைக்கிறார். தமிழ்நாட்டில் ஏற்பட்ட இந்த நிகழ்வை பேரிடராக அறிவித்து, சிறப்பு நிதியை ஒதுக்கீடு செய்திட வேண்டும் என்ற கோரிக்கையை பிரதமர் மோடி காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படும் பேரிடர் தொடர் நிதியை மட்டுமே தமிழ்நாட்டுக்கு கொடுத்துவிட்டு நூறாண்டு காலத்தில் ஏற்படாத இந்த பேரிடரை பேரிடராக அறிவிக்க தயங்கி அதற்காக சிறப்பு நிதியாக சல்லி காசை கூட ஒதுக்காத பிரதமர் மோடி, தமிழ் மொழியும், தமிழ் நாட்டு மக்களையும் நேசிப்பதாக கூறுவதும்; தமிழில் சில வார்த்தைகளைப் பேசுவதும், தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றும் அரசியல் சித்து விளையாட்டாகும்.

தமிழ்நாட்டு மக்கள் ஏமாளிகள் அல்ல என்பதை இந்த ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அறிவிப்பார்கள். மதுரையை பன்னாட்டு விமான நிலையமாக அறிவித்திட வேண்டும். இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும். பொருளாதாரம் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் பினாங்கு மற்றும் டோக்கியோவிற்கு நேரடி விமான சேவையை தொடங்கிட வேண்டும் போன்ற அடிப்படையான தேவைகளை கோரிக்கைகளாக வைத்து பேசிய பொழுது அதற்கு ஒரு வார்த்தை கூட பேசாமல் மௌனம் காத்தது தமிழ்நாட்டுக்கு செய்யும் மிகப்பெரிய துரோகமாகும். திருக்குறளையும், திருவள்ளுவரையும் பற்றி பேசும் பிரதமர் மோடி அந்தத் திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க ஏன் தயக்கம்?

தமிழ்நாடு அரசு ஜி.எஸ்.டி. வரியாக லட்சக்கணக்கில் அள்ளிக் கொடுத்தும் அதில் கிள்ளி கொடுக்க கூட ஒன்றிய அரசுக்கு மனமில்லை. ஆனால் தமிழ் நாட்டு மக்களின் வரிப்பணத்தை போன்ற வடமாநிலங்களுக்கு வாரி கொடுக்கிறது, ஒன்றிய அரசு. இவற்றையெல்லாம் நடுநிலையாக உள்ள தமிழ் நாட்டு மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பாரபட்சமின்றி அனைத்து மாநிலங்களுக்கும் சமமாக செயல்படக் கூடிய ஓர் அரசு, அரசின் நிறுவனங்களான சி.பி.ஐ., ஐ.டி, ED போன்ற நிறுவனங்களை அரசியலுக்காக பயன்படுத்தாத ஓர் அரசு, அனைத்து இன, மத, மொழி மக்களையும் சமமாக கருதக்கூடிய ஓர் அரசு, சமூக நீதியை நிலை நாட்டக் கூடிய மதசார்பற்ற ஓர் அரசு ஒன்றியத்தில் அமைவதுதான் இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு உகந்ததாக அமையும். அதற்கான உறுதியினை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதற்கான ஒரு சமிக்கை தான் தமிழ்நாட்டில் நேற்றைய பிரதமருடைய நடவடிக்கையாகும்.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

47வது சென்னைப் புத்தகக் காட்சி

“கலைஞர் கருவூலம்”

விற்பனைக் கூடத்தில்

தலைமைக் கழக வெளியீடுகள்

47வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2024 ஜனவரி 3 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.

புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 378ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

திருச்சி சிவா எம்.பி. - அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைக்கின்றனர்!

மேற்கு மண்டல வழக்கறிஞர் அணி பாசறைக் கூட்டம்!

சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

வழக்கறிஞர் நிர்வாகிகள் பாசறைக் கூட்டக் குறித்து கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. விடுத்த அறிவிப்பு வருமாறு:

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மேற்கு மண்டல வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பயிற்சி பாசறை கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (07.01.2024) காலை 10.00 மணியளவில் தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெறுகிறது.

கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., நிதியமைச்சர் தங்கம் தென்னரசு மேற்கூறிய பயிற்சி பாசறை கூட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரையாற்ற இருக்கின்றார்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக சட்டத்துறை மாநில நிர்வாகிகளும் கீழ்க்காணும் மாவட்டங்களுக்குட்பட்ட கழக வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும்.

பங்கேற்க வேண்டிய கழக மாவட்டங்கள்:

திருப்பூர் வடக்கு - திருப்பூர் தெற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு - கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு - தர்மபுரி மேற்கு, சேலம் கிழக்கு - சேலம் மேற்கு - சேலம் மத்திய, கோவை வடக்கு - கோவை தெற்கு - கோவை மாநகர், நாமக்கல் கிழக்கு - நாமக்கல் மேற்கு, விழுப்புரம் வடக்கு - விழுப்புரம் தெற்கு, ஈரோடு வடக்கு - ஈரோடு தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு - கள்ளக்குறிச்சி தெற்கு, நீலகிரி.

குறிப்பு : மேற்கூறிய பயிற்சி பாசறை கூட்டத்தில் வழக்கறிஞரணி நிர்வாகிகள் பங்கேற்பதை மாவட்ட அமைப்பாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

என்.ஆர். இளங்கோ எம்.பி.
செயலாளர் - கழக சட்டத்துறை

சங்கரன்கோவில் கோமதி அம்பாள் அரசுப் பள்ளியில்

2வது பொதிகை புத்தகக் கண்காட்சி!

மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன் - ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தென்காசி.ஜன.4-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2வது பொதிகை புத்தக கண்காட்சி நிகழ்வு கடந்த 24.12.2023 முதல் 02.01.2024 வரை 10 நாட்கள் வெகு விமரிசையாக நடைபெற்றது.இந்த புத்தக கண்காட்சி க்கு 3,16,177 பார்வையாளர்கள் வருகை புரிந்துள்ளனர்.இந்த 10 நாட்களில் ரூபாய் 50,00,000 க்கு புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க அனைவரும் புத்தகத்தை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும், பொது அறிவை வளர்த்து கொண்டு மாணவர்கள், மாணவியர் இளைஞர்கள், கல்வியில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாடு முழுவதும் புத்தகக் கண்காட்சி நடைபெற்று வருகிறது.இந்த புத்தகக் கண்காட்சி மூலம் இலட்சக்கணக்கான மாணவர்கள், மாணவியர்கள்,இளைஞர்கள்,

பொதுமக்கள் என பெரிய அளவில் பயன் பெற்றுள்ளனர்.மேலும் பல்வேறு எழுத்தாளர்களின் புத்தகங்களும் லட்சக் கணக்கில் விற்பனையாகியுள்ளது.

அதன்படி தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி மைதானத்தில் பொதிகை 2வது புத்தகத் திருவிழா மாவட்ட நிர்வாகம்,பொது நூலக இயக்கம்,தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள்,கலைஞர்கள் சங்கம் உள்ளிட்டோர் இணைந்து100 க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டு புத்தகக் கண்காட்சி கடந்த 24.12.2023 முதல் 02.01.2024 வரை 10 நாட்கள் வெகு சிறப்பாக நடைபெற்றது.இதில் 50 புத்தக அரங்குகள்,10 அரசு அலுவலக அரங்குகள்,லட்சக்கணக்கான புத்தங்களுடன் சிறப்பாக நடைபெற்றது.

புத்தகக் கண்காட்சியில் தினசரி நிகழ்வாக காலையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்,மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள், சுரண்டை காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் பாரம்பரிய உணவு திருவிழா, மாவட்ட வாழ்வாதார இயக்கம் சார்பில் கண்காட்சிகள்,பள்ளி கல்வித் துறையின் இல்லம் தேடி கல்வி,எண்ணும் எழுத்தும், நான் முதல்வன் உள்ளிட்ட திட்டங்களின் கண்காட்சி,பள்ளி கல்வித் துறை,பொது நூலக இயக்கம்,மாவட்ட நிர்வாகம் சார்பில் சங்கப்புலவர் மாங்குடி மருதனார் அரங்கில் 60 புத்தக அரங்கில் லட்சக்கணக்கான புத்தகங்களுடன், சுய உதவி குழுவினரின் அரங்குகள்,உணவு திருவிழா, பட்டிமன்றம்,முன்னணி எழுத்தாளர்கள் உரைநூல் வெளியீடு, புத்தகக் கண்காட்சி,வில்லிசை,கிராமிய கலை நிகழ்ச்சி,நாட்டுப்புற நிகழ்வுகள் என பல் சுவைகளுடன் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

புத்தகக் கண்காட்சியின் நிறைவு விழா நேற்று முன்தினம் 02.01.2024 செவ்வாய்க்கிழமை மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன் தலைமையில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் முத்துக்குமார் வரவேற்புரையாற்றினார்.

ரூ.50 லட்சத்திற்கு புத்தக விற்பனை!

இந்த புத்தக கண்காட்சியை 19,740 பள்ளி மாணவர்கள்,15,485 கல்லூரி மாணவர்கள்,2,82,052 பொதுமக்கள் என மொத்தம் 3,16,177 பார்வையாளர்கள் வருகை புரிந்து சிறப்படைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

நிகழ்வில் பல்வேறு கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறை 2022-23 ஆண்டுக்கான மாவட்ட கலை விருதுகள்

கலை முத்து மணி விருது தவில் கலைஞர் சின்னக்காளான்பட்டி கே.கணேசன்,சிலம்பாட்டக் கலைஞர் தென்மலை ச.செந்தட்டி காளை,

நாதஸ்வர கலைஞர் சிந்தாமணி எஸ்.எஸ்.முருகன்,ஆகியோருக்கு தலா ரூபாய் 4000 ம்.

கலை நன்மணி விருது புலியாட்டக் கலைஞர் வாசுதேவநல்லூர் செல்லப்பா, தவில் கலைஞர் மேலப்பாவூர் மாரியப்பன்,தெருக்கூத்து கலைஞர் ஆராய்ச்சிபட்டி கர்ணன் ஆகியோருக்கு ரூபாய் தலா 6000/- ம்.

கலை சுடர்மணி விருது வில்லிசைக் கலைஞர் செங்கோட்டை டி. மாரியப்பன், நாதஸ்வரக் கலைஞர் கடையநல்லூர் கி.பழனிச்சாமி, கிராமிய பாடகர் கீழ அழகுநாச்சியாபுரம் சி.பெருமாள்சாமி ஆகியோருக்கு தலா ரூபாய் 10000/- ம்.

கலை வளர்மணி விருது பரதநாட்டிய கலைஞர் தென்காசி சு.புரு ஷோத்தமன், புலியாட்டக் கலைஞர் தென்மலை நீ.வனராஜ், கும்மிபாட்டு கலைஞர் வாசுதே வநல்லூர் பி.நமச்சிவாயம் ஆகியோருக்கு தலா ரூபாய் 15,000/- ம்.

கலை இளமணி விருது உடுக்கை கலைஞர் கடையாலுருட்டி மகாவிஷ்ணு, தப்பாட்டக் கலைஞர் வாசுதேவநல்லூர் மாரிமுத்து,ஓவியக் கலைஞர் இலஞ்சி நிலோபார்ஷா ஆகியோருக்கு தலா ரூபாய் 20000/- ம். வீதம் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

மேலும் விழாவில் பணி புரிந்த அரசு அலுவலர்கள்,தன்னார்வலர்களுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் நினைவு பரிசு,சான்றிதழும் வழங்கப்பட்டது.

நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.

புத்தகத் திருவிழாவை ஊக்குவிக்கும் வகையில் புகைப்பட கலைஞருக்கு தனித்திறன் போட்டி அறிவிக்கப்பட்டது.

இதில் தனித்திறன் போட்டியில் முதலிடம் பெற்ற கார்த்திகேயனுக்கு ரூபாய் 10,000 மற்றும் சான்றிதழ் 2வது இடம் பெற்ற சுப.கோமதிக்கு ரூபாய் 5,000ம் மற்றும் சான்றிதழ்,3ஆம் இடம் பெற்ற சதீஷ் என்பவருக்கு ரூ 3,000/- ம்

மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை வழங்கினார்.

இந்நிகழ்வில் சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ.சங்கரன்கோவில் நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி சரவணன், ஒன்றிய குழு தலைவர் லாலா சங்கர பாண்டியன்,மாவட்ட பொருளாளர் சரவணன்,நகர செயலாளர் பிரகாஷ், ஒன்றிய செயலாளர் பெரியதுரை,

கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி உடற்கல்வி இயக்குனர் நாராயணன்,நகர துணை செயலாளர் சுப்புத்தாய்,இளைஞரணி துணை அமைப்பாளர் கார்த்தி,உள்பட கழகத்தினர்,அரசு அலுவலர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட நூலக அலுவலர் மீனாட்சி சுந்தரம் நன்றி உரையாற்றினார்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பெருவிளை, கிறிஸ்டோபர் நகர் விரிவாக்கம் பகுதியில் ரூ 1.20 கோடி மதிப்பீட்டில் அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் அமைக்கும் பணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆனந்த் மோகன், துணை மேயர் திருமதி.மேரி பிரின்ஸி லதா, மாநகராட்சி பொறியாளர் பாலசுப்பிரமணியம், சுகாதார துணை இயக்குநர் திருமதி. மீனாட்சி, மாநகர் நல அலுவலர் மருத்துவர். ராம்குமார், மண்டல தலைவர் செல்வகுமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. அருள் சபிதா ரெக்ஸலின், அமல செல்வன், தொழில்நுட்ப அலுவலர் பாஸ்கர், சுகாதார ஆய்வாளர்கள் மாதவன் பிள்ளை, சத்தியராஜ், பகுதி செயலாளர் ஷேக்மீரான், சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.